திரு கு. கிருஷ்ணமூர்த்தி : பழனிக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்துபோய்க்கொண்டிருக்கிறார்கள். திருச்சியிலிருந்து, சேலத்திலிருந்து மதுரையிலிருந்து, கோவையிலிருந்து சர்க்கார் பஸ்கள் விட உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உறுப்பினர் கேட்கின்ற அளவில் பக்தர்களிடமிருந்து கோரிக்கை எதுவும் வரவில்லை.

திருப்பூர் கூட்டுறவு பால் விநியோக சங்கம்

*** 95 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பால் கூட்டுறவு சங்கத்தில் பாலைக் குளிர்ப்பதனம் செய்யும் இயந்திரம் எந்த தேதியிலிருந்து இயங்கி வருகிறது ?

(இ) மேற்படி சங்கத்தில் நாள் ஒன்றுக்கு எவ்வளவு லிட்டர் பால் குளிர் பதனம் செய்யப்பட்டு விற்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) பாலைக் குளிர்பதனம் செய்யும் இயந்திரம் 13—8—1967 அன்று செயல்படத் தொடங்கியது.

(இ) இச் சங்கத்தின் அன்றாடம் 1,250 லிட்டர் பால் குளிர்பதனம் செய்யப்பட்டு பக்குவப்படுத்தப்படுகிறது.

*** 96 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் கூட்டுறவு பால் விநியோக சங்கத்திற்குப பால் குளிர்பதனம் செய்யும் கட்டிடத்தை எவ்வளவு ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இறுதி மதிப்பீட்டுக்குப் பின்னரே மொத்தச் செலவினை மதிப்பிட முடியும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் கூட்டுறவு பால் விநியோக சங்கத்தில் தற்பொழுது அமைக்கப்பட்டிருக்கிற குளிர்பதனம் செய்யும் இயந்திரத்தின் மூலமாக நாளொன்றுக்கு பத்தாயிரம் லிட்டர் பாலை தயார் செய்யவேண்டும் என்று திட்டமிட்டு இப்பொழுது நாள் ஒன்றுக்கு 1,200 லிட்டர் பால்தான் தயாரிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் இதுவரையில் அங்கே பாலை அதிகமாகக் குளிர்பதனம் செய்வதற்கு முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை. விரைவிலே 10,000 லிட்டர் பாலை தயாரிக்கிற அளவுக்கு முயற்சி எடுத்து நிர்வாக அமைப்பிலே குறையிருந்தால் மாற்றியமைக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தற்பொழுது 1,250 லிட்டர் பால் நாளொன்றுக்குப் பக்குவப்படுத்தப்படுகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் இன்னும் ஒரு 500 லிட்டர் பக்குவப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளலாம். தற்பொழுது 16 பால் கூட்டுறவு சப்ளை யூனியன்கள் மூலம்தான் கிடைக்கிறது. இவற்றைப் பெற்று இந்தக் காரியம் நடைபெறுகிறது. இன்னும் பால் சப்ளை யூனியன் களை விஸ்தரிப்பதற்கும், ஊக்குவிப்பதற்கும் வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சொஸைடிகள் அதிகமாகிற நிலையில் தான் அது அதிகமாகும். இந்தச் சாதனம் ஒரு நாளில் 6,000 லிட்டர் முழு அளவில் செய்யலாம். அதற்கு முயற்சி செய்கிறோம். நிர்வாகக் குறை ஒன்றும் இல்லை. இப்பொழுதுதான்